Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 601/2025 PW-1**

Name : யுவராஜ்
Father / Husband name : மாணிக்கம்
Village : பழவேரி
Age : 44
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 09.03.2026

A1, A2 present. Both side counsel present.

<u>**முதல் விசாரணை**</u>

நான் சென்னையில் ஆட்டோ ஓட்டுகிறேன். சாட்சி சரவணன் எனது மாமா. சாட்சி வரலட்சுமி எனது அத்தை மகள். சாட்சி பிரபாகரன் எனது நண்பர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், 2வது எதிரி எனது 2வது மனைவி, 1வது எதிரி எனது மாமனார். கடந்த 04.05.2025 க்கு ஒருவாரத்திற்கு முன்னதாக எனது அம்மாவிற்கு கால் அடிப்பட்டு திண்டிவனம் அரசு மருத்துவமனை சிகிச்சையிலிருந்தார். 03.05.2025 அன்று மதியம் 2 மணியளவில் மருத்துவமனையிலிருக்கும் எனது அம்மாவை சரியாக எனது மனைவி கவனிக்கவில்லை என்று மருத்துவமனையிலிருந்து போன் மூலம் எனக்கு தகவல் சொன்னார். தகவல் அறிந்த நான் மறுநாள் காலை மருத்துவமனைக்கு வந்து விசாரித்து விட்டு மாலை 6 மணியளவில் தாதாபுரத்திலிருக்கும் 1வது எதிரியின் வீட்டிற்கு சென்றபோது 1, 2 வது எதிரிகள் மற்றும் 2வது எதிரியின் அம்மா ஆகியோர்கள் இருந்தார்கள். நான் 2வது எதிரியிடம் எனது அம்மாவை ஏன் கவனிக்கவில்லை என்று கேட்டபோது தேவிடியாபையா நான் எதற்கு உனது அம்மாவை பார்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டு, 1, 2 வது எதிரிகள் என்னை அசிங்கமாக கேட்டார். நான் தாலியை கழட்டிதருமாறு கேட்டேன், 1வது எதிரி வேகமாக ஓடிவந்து என்னை கடிக்கவந்தார், நான் அதனை தடுத்தபோது எனது இடது கை மோதிர விரலில் கடித்தார். நான் மயக்கமானபோது

மாடியிலிருந்து என்னை எதிரிகள் அவர்கள் வீட்டிலிருந்த மாடிபடிக்கட்டில் தள்ளிவிட்டார்கள். அதில் எனக்கு முகம், தாடை, தலையில் வலது புறத்தில் அடிப்பட்டது. பின்னர் அடிப்பட்ட நான் வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையம் சென்று பின்னர் போலிசார் உதவியுடன் ஆம்புலன்சில் திண்டிவனம் மற்றும் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். பின்னர் 05.05.2025 அன்று போலிசார் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கிச்சென்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யவில்லை, எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.